**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை-**

1) நான் தனியார் பேருந்தின் ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன். மேற்படி பேருந்து ஈரோட்டிலிருந்து மேட்டூர் செல்லும் பேருந்தாகும். ஒரு மாதத்தில் எனக்கு 15 நாட்கள் பணி செய்யவேண்டி வரும். எனது மாத வருமானம் ரூ.20,000/- ஆகும். எனக்கு இன்னும் திருமணமாகவில்லை. மேற்படி வருமானத்தை தவிர வேறு வருமானம் எனக்கு உள்ளதா என்றால் என்னுடைய ஓய்வு நேரத்தில் ஆக்டிங் டிரைவராக கனரக வாகனம் ஓட்ட செல்வேன், அதன்மூலம் எனக்கு வருமானம் வரும். ஒரு மாதத்திற்கு சுமாராக ரூ.10,000/- வருமானம் வரும். நான் பூலப்பாளையம், பெரியபுலியூரில் குடியிருந்து வருகிறேன். எதிரியை எனக்கு கடந்த 5,6 வருடங்களாக தெரியும். எவ்வாறு பழக்கமென்றால் நான் ஓட்டும் பேருந்தில் அவர் பயணம் செய்யும் வகையில் பழக்கமாகும். அவர் அம்மாபேட்டையில் ஏறி ஈரோடு பேருந்து நிலையத்தில் இறங்குவார். மேட்டூரிலிருந்து மாலை 06.00 மணிக்கு பேருந்து புறப்பட்டு இரவு 07.30 மணிக்கு அம்மாபேட்டை வரும். அப்போது எதிரி மேற்படி பேருந்தில் ஏறுவார். தினமும் மேற்படி பேருந்தில் வருவாரா என்றால் இல்லை, எப்போதாவது ஒருமுறைதான் வருவார்.

2) எதிரி குருவரெட்டியூர் அரசு பள்ளில் விளையாட்டு ஆசிரியராக உள்ளார். எதிரியின் வீடு, குடும்பம் போன்ற விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் எதிரி ஈரோட்டில் உள்ள மாணிக்கம்பாளையத்தில் உள்ள ஹவுசிங் யுனிட்டில் குடியிருந்து வருகிறார். அவர் மனைவி இல்லத்தரசியாக உள்ளார். 2 குழந்தைகள் உள்ளனர். மேற்படி விவரங்கள் எனக்கு யார் சொல்லி தெரியும் என்றால் எதிரி பழக்கமான அடிப்படையில் எதிரி சொல்லிதான் தெரியும். நான் சொல்வதுபோல நான் ஒட்டி செல்லும் பேருந்தில் எதிரி எந்நாளும் சென்றதில்லை என்றாலும், எதிரி எனக்கு பழக்கமில்லை என்றாலும், எதிரி எப்போதுமே அவரது பள்ளிக்கு பைக்கில் செல்வதுதான் வழக்கம் என்றாலும் சரியல்ல. எதிரியினுடைய தொழில், குடும்பம், வீடு ஆகியவற்றை பற்றி எதிரி என்னிடம் எதுவும் சொல்லவில்லை என்றாலும், இந்த வழக்கிற்கு முன்னர் எதிரி என்னை பார்த்ததே இல்லை என்றாலும், வழக்கில் ஆஜரான பின்னர்தான் எதிரிக்கு என்னையே தெரியும் என்றாலும் சரியல்ல. இந்த வழக்கில் எதிரி ஆஜரானதற்குபின்னிட்டுதான் நானே எதிரியை பார்த்துள்ளேன் என்றாலும், அதற்கு முன்னால் எதிரியை எனக்கு தெரியாது என்றாலும் சரியல்ல.

3) எதிரி அவரது குடும்ப செலவிற்காகவும், வியாபார செலவிற்காகவும் என்னிடம் பணம் கேட்டார். எதிரி ஆசிரியராக உள்ள சூழ்நிலையில், என்ன வியாபாரம் செய்வதற்காக பணம் கேட்டார் என்றால் எனக்கு தெரியாது. என்ன வியாபாரம் செய்வதற்காக பணம் கேட்கிறார் என்று தெரியாமலேயே நான் பணம் கொடுத்துவிட்டேனா என்றால் அவர் கேட்டதால் கொடுத்தேன். இதற்கு முன்னர் எனக்கும், எதிரிக்கும் கொடுக்கல், வாங்கல் உள்ளதா என்றால் அவ்வபோது கடன் கேட்பார், நான் கொடுப்பேன், அதை அவர் திருப்பி செலுத்திவிடுவார். அவர் இதுவரை என்னிடம் ரூ.5,000/-, ரூ.10,000/- அதிகபட்சமாக ரூ.50,000/- வரை பணம் வாங்கி உள்ளார். இதுவரை என்னிடம்

10 முறை கைமாற்றாக கடன் வாங்கி இருப்பார். அவர் குடும்ப தேவைக்காக வேண்டுமென்று கேட்பார். நான் அவ்வாறு கைமாற்றாக கடன் கொடுத்ததற்கு ஈடாக எந்த ஆவணமும் வாங்கியதில்லை. தற்போது கொடுத்த தொகை பெரிய தொகை என்பதால் ஈடாக காசோலை வாங்கினேன். இதற்கு முன்னர் எதிரி என்னிடம் வாங்கிய கடன்தொகைகளுக்கு எவ்வித ஆதாரமும் என்னிடமில்லை. தற்போது கொடுத்த கடன் தொகைக்கு மட்டும்தான் ஆதாரமாக வழக்கு காசோலை உள்ளது. எதிரி எந்த காலத்திலும் எந்த தொகையும் என்னிடம் கடனாக வாங்கியதில்லை என்றாலும், எதிரி என்னை பார்த்ததே இல்லை என்றாலும், நான் வழக்கிற்காக எதிரி என்னிடம் அடிக்கடி கடன் வாங்கி இருந்தார் என்றும், இந்த கடனுக்கு ஈடாக வழக்கு காசோலை கொடுத்துள்ளார் என்று பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

4) எதிரி எந்த தேதியில் என்னிடம் கடன் கேட்டார், எந்த தேதியில் நான் கடன் கொடுத்தேன் என்று எனக்கு நியாபகமுள்ளதென்றால் சரிதான். நான் எனது வீட்டில் சேமிப்பாக வைத்திருந்த தொகையிலிருந்தும், சீட்டு போட்ட வகையில் எடுத்த தொகையிலிருந்தும், எதிரிக்கு ரூ.3 இலட்சம் கடனாக கொடுத்தேன். எதிரி கடன் கொடுக்கவேண்டும் என்பதற்காக சீட்டு பணம் எடுத்து வைத்திருந்தேனா என்றால் இல்லை வேறு தேவைக்காக எடுத்து வைத்திருந்தேன். எதிரி கடன் கேட்டதால் அதிலிருந்து கொடுத்தேன். கடன் கொடுத்த அன்றே அதற்கு ஆதரவாக வழக்கு காசோலையை நான் பெற்றுகொண்டேனா என்றால் எதிரியாக கொடுத்தார். எதிரி என் முன்னிலையில் தான் காசோலையில் எழுதி கையொப்பமிட்டு கொடுத்தாரா என்றால் இல்லை, எதிரி வரும்போதே காசோலையை நிரப்பி கொண்டு வந்திருந்தார். எதிரிக்கு நான் எனது வீட்டில் வைத்து கடன் கொடுத்தேன். 05.06.2022 அன்று மாலை 7.30 மணிக்கு எனது வீட்டில் வைத்து கொடுத்தேன். வீட்டில் என்னுடன் அம்மா மட்டும் உள்ளார். கடன் கொடுத்த அன்று வீட்டில் யாருமில்லை.

5) எதிரிக்கு கடன் கொடுத்த விவரமும், அதற்கு ஈடாக எதிரி எனக்கு காசோலை கொடுத்த விவரமும் என்னைதவிர வேறு யாருக்கும் தெரியாது. எதிரி என்னிடம் கடன் கேட்டார் என்பதும், எனது வீட்டிற்கு 5.6.22 அன்று மாலை 7.30 மணிக்கு வந்து கடன் வாங்கினார் என்பதும், அதற்கு ஈடாக வழக்கு காசோலை கொடுத்தார் என்பதும் பொய் என்றால் சரியல்ல. நான் ரூ.3 இலட்சம் கடன் கொடுக்கும் அளவிற்கு எனக்கு பொருளாதார வசதியில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கிற்காக நான் பொய்யான தகவலை சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு காசோலையை எதிரியே பூர்த்தி செய்து 05.06.2022 அன்று என்னிடம் கொண்டு வந்து கொடுத்தார் என்று சொல்வதும் பொய் என்றால் சரியல்ல. காசோலை தேதியில் வங்கியில் தாக்கல் செய்து பணமாக மாற்றி கொள்ளுமாறு எதிரிஎன்னிடம் சொன்னார், நான் அந்த தேதியில் வசூலுக்காக தாக்கல்செய்தபோது அது Account Blocked என்ற காரணத்தினால் திருப்பப்பட்டுவிட்டது.

எதிரியின் வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.